Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC.No.44 /2018 | | |
| Witness for Complainant | : PW 7 – Chief and Cross | | |
| Name | : ராமமூர்த்தி | Taluk | : |
| Father's / Husband Name | : கண்ணையன் | Calling | : |
| Village | : | Age | : 63 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 15.04.2026.

துவக்க நேரம்– 1.00 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்துறையில் ஓய்வு பெற்று ஜோலார்பேட்டையில் வசித்து வருகிறேன். கடந்த 30.04.2020 நான் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்றேன் அத்ற்கு முன்பாக 04.02.2018 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு. சுப்பிரமணி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாதி வனஜா என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.52/2018 இதச பிரிவுகள் 279, 337, 304A இதச வாக வழக்கு பதிவு செய்தும் முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் மனுவை கணம் ஊத்தங்கரை நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை எனது விசாரணைக்கு வைத்தார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 05.02.2018 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான ஊத்தங்கரையில் இருந்து திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருணபதி பிரிவு ரோடு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் சின்னதம்பி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

**பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே காலை 7.30 மணிக்கு ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த கோட்டீஸவரன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் வனஜா, கலைச்செல்வன், தனசேகரன் லட்சுமணன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு கோட்டீஸவரன் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் எண் 742. திரு, சுரேஷ்குமார் என்பவர் மூலமாக மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு எதிரி சரவணன் என்பவரை 05.02..2018 தேதி மதியம் 2.00 மணிக்கு ஊத்த்ங்கரை காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். 07.02.2018 ம் தேதி எதிரி ஓட்டிவந்த அசோக் லைலேண்ட் லாரி TN83A7822 என்ற வாகனத்தை விபத்துக்கான காரணம் வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். இறந்துபோன கோட்டீஸ்வரன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் TN 24 P 1833 TVS Scooty Pep வானத்தை 07.02.2018 ம் தேதி ஆய்வளாரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பின்பு இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை அரசு மருத்துவர் தியாகராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மோட்டார் வாகனங்கனை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு. குமார் மற்றும் திரு. சதிஸ்குமார் விசாரித்து ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ. 8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வறிக்கை ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காயம்பட்ட வாதி வனஜாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து

விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்றேன். **விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா. ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேதத்தை பிரேத விசாரணைக்காக எடுத்து சென்ற தலைமைக்காவலர் திரு. சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர். திரு. சுப்பிரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கினை புலன்விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 337, 304A ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் விபத்தில் இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்திற்கு அருகாமையில் சந்தரா, லட்சுமி செல்வம், ராமசாமி மற்றும் சிலரின் வீடுகள் அங்கு உள்ளது என்றால் இல்லை. மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டதா என்றால் இல்லை. சாட்சிகள் யாரம் முன்வரவில்லை. விபத்து நடந்த இடம் ஊத்தங்கரையில் இருந்து திருப்பத்தூர் செல்லும் சாலை தெற்கில் இருந்து வடக்காக செல்லும் மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும் அருணபதி சாலை மாநில நெடுஞ்சாலையில் இருந்து எவ்வளவு தூரத்தில் பிரிகிறது என்றால் 5 அடி தூரத்தில் பிரிவு ரோடு வருகிறது. அ.சா.1 வனஜா என்பவர் தன்னுடைய வாக்குமூலத்தில் சாலையின் இடது புறத்தில் இருந்து வலது பக்கம் திரும்பி அருணபதி ரோடு சென்றபோது விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். விபத்தானது கோட்டீஸ்வரன் என்பவர் எந்தவித சமிக்சையும் செய்யாமல் திடீரென அருணபதிசெல்ல வலது பக்கம் திரும்பியதால் விபத்து ஏற்பபட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரிக்காமல் எதிரியின் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அக்கம் பக்கத்தினரை விசாரிக்காமல் நேரில் பார்த்த சாட்சிகளை விசாரிக்காமல் பிரேத விசாரணை சாட்சிகளை மட்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்திலேயோ

வைத்து ஆவணங்களை தயார் செய்யததால்தான் அ.சா.6 சின்னதம்பி அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்தானது இறந்துபோன கோட்டீஸ்வரன் என்பவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம்– 1.30 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.